**ஆகஸ்ட் -12**

**"மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும். அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக. " - சங் 19 : 12 – 14**

மறைவான பாவங்களிலிருந்து கழுவப்படுவதற்காகவும், இவ்விதமாக துணிகரமான பாவம் செய்வதிலிருந்து தடுக்கப்படுவதற்காகவும் ஒவ்வொரு புத்தியுள்ள கிறிஸ்தவனும் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிற இந்த ஜெபத்தைத் தொடர்ச்சியாகச் செய்வான். இவ்விதமாக மனப்பூர்வமாக ஜெபித்துக் கொண்டு, பாவத்தின் ஆரம்பம் தன்னில் ஏற்படுவதை நிகழாமல் பார்த்துக் கொள்ளுவான். அவசியமான ஒவ்வொரு சமயத்திலும், உதவிக்காக, கிருபையின் ஊற்றண்டைக்குத் தொடர்ச்சியாகச் சென்று, தன்னுடைய இருதயத்தை சுத்திகரிக்கப்பட்ட, பரிசுத்த நிலையில் வைத்துக் கொள்ளுவான். வெளிப்படையான அல்லது துணிகரமான பாவங்களுக்கு எதிராக மாத்திரம் காவல் புரிந்து கொண்டு தனது மனதின் இரகசிய பாவத்தின் ஆரம்பத்தை அசட்டை செய்து கொண்டு, பரிசுத்தமானதும், கர்த்தருக்கு சமீபமானதுமான ஒரு ஜீ வியத்தை ஜீவிக்க நாடுகிற ஒருவன், ஒரு நல்ல காரியத்தை மிகவும் முட்டாள்தனமான விவேகமற்ற வழியில் செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிறான். **- Z ’98, 22(R 2248)**

**நம் எல்லோருக்கும் மறைவான குற்றங்கள் உண்டு. கூட்டாளிகளும், சுற்றுப்புறங்களும், தீய பயிற்சியும் ஓரளவு இவைகளை அதிகரித்திருந்தாலும், இவைகள் முக்கியமாக வம்சவழியாக நமக்கு வந்திருக்கின்றன. இவைகள் நம்மை அசுத்தப்படுத்துகின்றன. ஆகையால் இவைகளிலிருந்து கழுவப்படுவதற்காக, இந்த ஜெபத்தைச் செய்யவிரும்புகிறோம். பிதா இவைகளை நமக்கு வெளிப்படுத்தி, இவைகளை கழித்துப் போடுவதில் நமது ஒத்துழைப்பைப் பெறுகிறார். துணிகரமான பாவங்கள் முக்கியமாக அபாயகரமானவைகளாக இருக்கின்றன. கர்த்தர் இவைகளிலிருந்து நம்மை விலக்கிக் காக்கவும், இவைகள் நம்மை ஆண்டுகொள்ளுவதிலிருந்து தடுக்கவும் நாம் ஜெபிப்பது நமக்கு நன்மையாயிருக்கும். நமது வாயின் வார்த்தைகளும், நமது இருதயத்தின் தியானமும் நமது கன்மலையும் நமது மீட்பருமாகிய தேவனுக்குப் பிரீதியாயிருக்குமானால், இவைகளின் மேல் வெற்றிபெற சாத்தியமாக்கப்படுவோம்.**

**- P ’26, 109.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோபு 13:23; சங் 24:3-5; 26:1,2; 51:10; 139:23,24; எசே 36:25,26; 1யோவா 1:7,9;3:3; எபி 6:4-9; 10:26-31; 1யோவா 5:16; 2பேது 2:1-20; யூதா 4-25.**

**கோபுர வாசிப்பு : Z ’10, 118 (R 4592)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் பிதாவானவர் என்னை எவ்வாறு சுத்திகரித்தார் ? எந்தச் சந்தர்ப்பங்களில்? காரணமானவைகள் எவை? பலன்கள் என்ன?**